விவேகபாநு.

மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

அகரமுதலவெழுத்தெல்லாமாதி
பகவன்முதற்றேயுலகு—திருக்குறள்.

வால்யூம் I] ஜெனவரிமீ 1-உ [புத்தகம் 5

இராமாயண கூடார்த்தம்.

இவ்வுலகத்தின்கண் உத்தமஜென்மமாகிய மனிதஜென்மம் வாய்க்கப்பெற்றுவாழும் ஜீவர்களுள், சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் பஞ்சவிடயங்களிலும் உழன்று, தமக்கெப்போதும் துக்கமே பிராப்தியாயினும் அதனைச்சுகமாய்க்கருதி, அறிவிழந்துதிரியும் பாமரர்களையும், அநித்தியமான அவவிஷயங்களில் இந்திரியங்கள் செல்லவொட்டாமல் தடுத்தும், மனதை ஒருவழிப்படுத்தியும், சுத்த, புத்த, நித்த சொரூபராயும், சர்வபரிபூரணராயும் விளங்காநின்ற சாக்ஷாத் பகவானுடைய பாதாரவிந்தங்களையடைந்து, அவரையன்றிப் பிறிதொருபொருளையும இப்பிரபஞ்சத்தின்கண் காணாது, தமக்குச்சுபாவமாயுள்ள நித்திய திருப்தியில் இருமாந்திருக்கும் ஜீவன் முத்தர்களையும் தவிர்த்து, 'நான் யார்? என்னுடைய பிரவிர்த்தியென்ன? எனது ஸ்தானம் எது?" எனபலவை முதலாய கேள்விகளிற்புகுந்து, தமக்கு நேரிட்டிருக்கு முத்தாபங்களின் கொடுமையைச் சாந்திபண்ணமுயலும் பக்குவர்கள் அவர்களுடைய யதாஸ்தானமாகிய மோக்ஷமென்னும் நித்திய சுகத்தையடையும்பொருட்டு இதிகாச புராணாதிகள் எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன. மோக்ஷத்திற்கு சாக்ஷாத் சாதனம் ஞானமேயாதலின் வேதமுதலபுராணம் இறுதியாகவுள்ள சகல நூல்களும் ஞானத்தையே விசேடித்துக்கூறுகின்றன அவைகளின் அந்தரார்த்தத்தைக் கிரகிக்க அறியாத சிலர் பாஹ்யார்த்தத்தை மாத்திரங்கொண்டிகழ்ந்தும், வேறு சிலர் அவைகளிற் சொல்லப்பட்ட கதைகள் மிகவும் கெட்டகதைகளென்று நிந்தித்தும், வருகிறார்கள்.

சுத்தமான இருதயமும் நல்ல விவேகமும் உடைத்தாயிருந்தாலொழிய சாஸ்திரங்கள் என்னும் கடலிற்புகுந்து வெளிவருதல் அரிதாதலின் அவைகளை விசாரிக்கவெத்தனிக்குமாந்தர் அவைகளின் சூக்ஷுமார்த்தங்களை நன்குணர்ந்த பிரம்மஞானிகளிடத்தில் கேட்டுணர்தல் தகுதியாம்.

இதிகாசங்களுளொன்றாகிய இராமாயணத்தில், இராஜநீதி, கற்புலக்ஷணம், சகோதரவாத்சல்லிய நேர்மை, துஷ்டர்களின்கதி முதலிய பலவிஷயங்கள் அதிநுட்பமாயும்மிகவிஸ்தாரமாயும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றனவன்றோ? சாதாரண ஜனங்கள் லௌகிக தர்மத்திற்குரியதான் இவ்விஷயங்களை அறிந்தொழுகவேண்டி இவையாவும் ஸ்ரீ வால்மீகி ரிஷியாற் சொல்லப்பட்டிருக்கின்றன. இவை இராமாயணத்தின் பாகியார்த்தமேயொழிய அந்தரார்த்தமன்று. அந்தரார்த்தம் இன்னதென்ன அத்தியாத்ம இராமாயணத்தில் விரிவாய் எழுதப்பட்டிருக்கின்றது. அதனை ஒருவாறு சுருக்கி இவ்விடத்தில் கூறுதும்.

மோக்ஷமென்று சொல்லப்பட்ட அயோத்தியா நகரத்தில், பிரம்மமென்னும் தசரத சக்கிரவர்த்தி, ஞானசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தியென்னும் கௌசலை, சுமித்திரை, கைகேசியென்று சொல்லப்பட்ட பத்தினிகளோடுகூடி வாழுங்காலத்தில் ஞானசக்தியென்னும் கௌசலையின் கர்ப்பத்தில் ஆத்மாவென்னும் ஸ்ரீ இராமர் உதித்தார். அவ்வியக்தமென்னும் பால்யதசையால் தன்னை மறந்து, அஞ்ஞானமயனாகிய ஜீவனேதானாகி, சிரவணமென்னும் வசிஷ்டனையடைந்து, மனனமென்னும் விஸ்வாமித்திரனைப் பின்றொடர்ந்து, வைராக்கியமென்னும் இலக்ஷ்மணனோடுகூடிச் சென்று, பஞ்சபாதகங்களென்னும் காடு, மலை, வனம், வனாந்திரங்களைக் கடந்து, ஆத்மா (இராமன்) என்னும் பரமேஷ்டி, ஞானமென்னும் பாணத்தைச்சந்தானஞ்செய்து, ஆவரணமென்னும் தாடகையின்மேல் பிரயோகித்துச் சங்காரஞ்செய்தும், இச்சையென்னும் மாரீசனைப் பயப்படுத்தி 'இனி நீயென்னை யெதிர்த்தால் மரிப்பாய் என்று சொல்லி ஓடச்செய்தும், விபசாரமென்னும் பாறையை மிதித்து ஆசாரமென்னும் அகலியைத்துதித்தும், ஏகாந்தமென்னும் மிதிலையிற் பிரவேசித்துச், சாந்தமென்னும்ஜனகமஹாராஜாவையடுத்துப்பின்னர் ஆனந்தமென்னும் ஜானகியைப் பாணிக்கிரகணஞ்செய்தும், மதம் என்னும் பாசுராமனை யெதிர்த்து, அம்மதத்தின்விருத்தி இனி ஒருகாலத்திலும் தலையெடுக்காமலடக்கி, மோக்ஷமென்னும்அயோத்தியிற்சென்று 'தான் ஜீவனல்லன்' என்றறிந்து, பிரம்மமென்னும் தசரதனைத் திரும்பவும் அடைந்தும், ஜீவப்பிரம்மைக்கியம் என்னும் பட்டாபிஷேகஞ்செய்தற்பொருட்டு வேண்டுங்காரியங்கள் நடக்குங்காலத்தில் கிரியாசக்தியென்னும் கைகேசியினுடைய சலனமென்னும் தாசிவந்துகூடி பிரம்மமென்னும தசரதனிற்பிரித்தாள். பின்னர் ஆத்மாவென்னும் ஸ்ரீ இராமர் வைராக்கியமென்னும் இலக்ஷ்மணனோடும் ஆனந்தமென்னும்வைதேகி(சீதை)யினோடுங்கூடி, சித்தமென்னும் சரயுநதியைக்கடந்து, புத்தியென்னும்குகனுடைய ஆச்சிரமத்தையடைந்து, விக்ஷேபமென்னும் வனத்தில் நடந்து, தவம் என்னும் சித்திரகூடத்திலிருந்து, அகங்காரமென்னும் விராதனைக்கொன்று, மனம் என்னும் காகாசுரனுடைய சங்கற்பமென்னும் கண்ணினைக்குத்தி, நிர்விகற்பம் என்னும் கண்ணினைத்திறந்தார்.

அப்பால் வீரியம் என்னும் அகஸ்தியரைக்கண்டு தைரியமென்னும் அஸ்திரம்பெற்றுக் காமம் என்னும் சூர்ப்பனகியைத் தண்டித்து, ஆகாமியமென்னும் கரதூஷணாதிகளைக் கண்டித்து, இச்சையென்னும் மாரீசனேதுவால் ஆனந்தமென்னும் சீதையைப் பிரிந்தபொழுது இராஜசம் என்னும் இராவணன் வந்து ஆனந்தமென்னும் சீதையை அபகரித்து, சுகமென்னும் சீதையைத் துக்கமென்னும் இலங்கையிற் கொண்டுவைத்து, அசத்வாசனைகளென்னும் ராக்ஷசிகளைக் காவலாக்கி, விசாரமென்னும் அசோகவனத்திலிருத்தினான்.

இச்சையென்னும் மாரீசனைப் பின்றொடர்ந்து சென்ற ஆத்மாவென்னும் ஸ்ரீ இராமர் அவனை நிராசையென்னும் பூமியில் புதைத்துவிட்டுத் திரும்பவந்து பார்த்தபொழுது ஜானகியைக் காணாததால் விசனப்பட்டு, வைராக்கியமென்னும் இலக்ஷ்மணனோடுகூட விக்ஷேபமென்னும் காட்டில்திரிந்து, சிந்தனையென்னும் கவந்தனைக்கொன்று, சந்தோஷமென்னும் சவரிமலையிற்சென்று, நித்தியாசமென்னும் அநுமானைத் தூதனையடைந்து, ஆனந்தமென்னும் சீதையைச் சிந்தித்து, ஞானமென்னும் சப்ததருக்களையுஞ் சேதித்து, பயம் என்னும் வாலியின்மேல் அஸ்திரசந்தானம்செய்து அபயமென்னும் சுக்ரீவனை ரக்ஷித்து, சுத்தவாசனையென்னும் அநுமானை ஸ்தோத்திரஞ்செய்து, மோகமென்னும் சமுத்திரத்தைக் கடந்து, லோபமென்னும் இலங்கணியை வதைத்து, அசுத்தவாசனையென்னும் ராக்ஷதரைச் சின்னபின்னமாக்கி, ஆனந்தமென்னும் சீதையைக்கண்டு உல்லாசமென்னும் அநுபூதிபிறந்து, விசாரமெனனும் அசோகவனத்தை நாசமாக்கி, அஞ்ஞானமென்னும் மாலியவானை நசிப்பித்து, சந்தேகமென்னும் அக்ஷயகுமாரனை ஜெயித்து, விபரீதமென்னும் இந்திரசித்தை யகற்றி, மயக்கமென்னும் பாசத்தினையறுத்து, இராஜசமென்னும் இராவணனையெதிர்த்து, மௌனமென்னும் அக்கினியை ஜோலிப்பித்து, தபமென்னும் இலங்கையைத் தகிப்பித்து, மோகமென்னும் வாரிதியைப் பந்தித்து, திடமென்னும் ஆச்சிரமம் கட்டினார். உடனே சாத்வீகம் என்னும் விபீஷணன் வந்தடுத்தான். பின்னர், தாமசமென்னும் கும்பகர்ணனைச் சேதித்து, இராஜசமென்னும் இராவணனைப் பயப்படுத்தி, விபரீதமென்னும் இந்திரசித்தைத் தடுத்து, மயக்கமெனனும பாசத்தால் பந்திக்கப்பட்ட வைராக்கிய மென்னும் இலக்ஷ்மணனை மோகாந்தியடைந்தபொழுது நித்தியாசமென்னும் அநுமான் நிஷ்டையென்னும்சஞ்சீவியைக்கொண்டுவந்து வைராக்கியமென்னும் இலக்ஷ்மணனுக்குப் போதமுண்டாக்கியபின் விபரீதமென்னும் இந்திரசித்தைக்கொன்றார். அப்பொழுது சஞ்சிதமென்னும் மூலபலப்படைகள் பிரம்படியாயெதிர்க்க, தீரமென்னும் மோகனாஸ்திரத்தால் அசுத்தவாசனையென்னும் ராக்ஷதர்கள் அடிமானார்கள். ஆகவே சுத்தவாசனைகள் யென்னும் வானரங்கள் அடுத்தார்கள். பின்னர் ஆத்மாவென்னும் ஸ்ரீ இராமர் கெம்பீரம் என்னும் கோதண்டமெடுத்து, இரா

ஜசமென்னும் இராவணனையெதிர்த்து, ஞானமென்னும் பாணந்தொடுத்து அகமென்னும் கலசத்தையுடைத்து, தசேந்திரியங்களென்னும்பத்துச்சிரசுகளையுஞ் சேதித்து, ஆனந்தமென்னும் சீதையைக்கண்டு, மௌனாக்கினியில் அவளை ஸ்நானம்செய்வித்து, அவளோடு சேர்ந்து மோக்ஷமென்னும் அயோத்தியிற் பிரவேசித்து, ஜீவப்பிரம்மைக்கியம் எனனும் மகுடாபிஷேகம் கைக்கொண்டு பிரம்மமென்னும் தசரதனேதானாகி மோக்ஷமென்னும் அயோத்தியாநகரத்திற்குப் பதியாகி கேவல கைவல்லிய பிரம்மானந்த சொரூப சாக்ஷாத்காரமாய்ப் பிரகாசித்தார்.

தசரதராமரது சரித்திரம்கூறும் நூலாகிய இராமாயணத்தில் இத்தகைய மேலான ஞானார்த்தமொன்று உள்ளடங்கியிருத்தல்போலவே சகல இதிகாச புராணங்களிலும் சாதாரண அர்த்தங்களுக்குப்புறமேசூக்ஷ்மார்த்தங்கள் அடங்கியிருக்குமென அறியத்தக்கது. விவேகிகள் அவைகளை ஆராய்ந்துணர்ந்து ஸ்ரீ இராமனைப்போலவே தமது சுதந்தரமாகிய மோக்ஷநிலத்திற் பிரவேசித்து சுகமாக வாழக்கடவர்.

சைவசித்தாந்தம்.

பதிபசுபாசத்தொகை.

குறள் வெண்பா.

விநாயகர் வணக்கம்.

பவளநிறத் தானைமுகன் பாத நினைப்பா
மலமறுப் பானெம் மகம்.

இது ஆகமங்களில் ஞானபாதத்தின்கண் கூறப்பெற்றபொருள்களின் உண்மையை, முதிர்வில்லாவிளைஞர்க்கு எளிதிலறிவுறுத்தற் பொருட்டுக் குருவினைமேலீட்டினாற் கூறப்புகுந்த இந்நூலாசிரியர், எடுத்துக்கொண்ட விஷயம் இனிது முடிதற்பொருட்டு, விக்கினங்களை நீக்கவல்ல விநாயகனை வணங்கும் வணக்கம் உணர்த்துகின்றது.

(பதவுரை) பவள நிறத்தானைமுகன்—செம்பவள நிறம் என்ன ஒளிர்கின்ற திருமேனியையுடைய ஆனைமுகப்பிள்ளையாரது,

---

* இஃது பழமையாகிய சித்தாந்த நூல்களில் ஒன்று. இந்நூல் ஏட்டுப் பிரதியிலுள்ளது. சைவசித்தாந்தம் இன்னதென யாவர்க்குந் தெரிவிக்கவேண்டி இதனையிங்கு பிரசுரிக்கலாயினோம்.

பாதம்—ஸ்ரீபாதங்களை எம் அகம்—அநாதியே எம்மைப் பந்தித்த ஆணவ மலத்தினு ளுண்டாம், அவலமறுப்பான்—துன்பமாகிய பிறவியினின்று நீக்குதற்பொருட்டு, நினைப்பாம்—சிந்தித்து உணர்குவாம்.

* பிறவித்துன்பததை நீக்கவல்ல தாளுக்கு இந்நூல் இடையூறின்றி இனிது முடிவு பெறச் செய்தல் ஓர் அருமையன்று என்பது கருத்து. "எம்மகம் அவலமறுப்பான்" என்பதற்கு எம்மனத்தின் கண்ணுள்ள மலக் கோளை யறுத்தற் பொருட்டு என்று பொருள் கூறினும் பொருந்தும்.

ஐங்கரவிநாயகனை ஆனைமுகனென் றெடுத்தோதியது அவன் அத்திரு வதனத்தால், தேவர்களது இடுக்கண் தீர்த்த பெற்றி நோக்கி யென்க.

கிரியாசத்தி, ஞானசத்தி ஆகிய இவ்விரண்டும் மூத்தபிள்ளையாரது இரண்டு திருவடிகளென்று மேலோர் கூறுவர்.

அகம்-ஆணவம், நெஞ்சம். அவலம் அவளமென எதுகை நோக்கி நின்றது. அவலம்-துன்பம்.

பாயிரம்

சிவவணக்கம்.

சிவனை நிரஞ்சனனைச் சின்மயனைச் சீவ
பவமுமறுப் பானைநினைப் பாம்.

இது மங்கல வாழ்த்துரைத்தலை உணர்த்துகின்றது.

(ப-ரை) சிவனை—நித்தியமங்கள சொருபனுகியும், நிரஞ்சனனை—நின்மலனுகியும், சின்மயனை—ஞான மூர்த்தியாயும், சீவன்—ஆத்துமாக்களுடைய, பவமுமறுப்பானை—பிறவித் தொடர்ச்சிக் கேதுவாகிய கன்மங்களையு நீக்கவல்லவனுகிய முன்ன சிவபெருமானை; நினைப்பாம்—சிந்தித்துப் போற்றுவாம்.

இதுமூவகை வாழ்த்துள், பொருளியல்பு உணர்த்ததெனக் கொள்க. என்னை? இந்நூலுள் முதற்கண் பதியியல் கூறியிருத்தலால் "சிவனை நிரஞ்சனனைச் சின்மயனை" என்றும், பின்னர் பசுவியல் கூறியிருத்தலால் "சீவன்" என்றும், அதன்பின் பாசவியல் கூறியிருத்தலால் "பவம்" என்றும், இறுதியில் அநுக்கிரகவியல் கூறியிருத்தலால் "அறுப்பானை" என்றும் முறையே இம்மங்கலவாழ்த்துள் உய்த்துணரவைத்தமை கண்டு தெளிக.

நிட்களமுஞ் சகளமுமல்லாததாய் தத்துவாதீதமாய் மலரகிதமாய் அநாதி நித்தியமாய் அகண்டிதமாய் அணுவுக்கணுவாய் மகத்துக்கு மகத்தாய் ஆநந்தவுருவாய் ஆன்மாக்களெல்லாஞ் சென்றடையப்படும் பேறாய் விளங்கிநிற்பதெதுவோ அது சிவம் என்றறிக. பவமும் என்ற உம்மை, எஞ்சிநின்ற ஆணவத்தையும் மாயையையுஞ், சுட்டிநின்றது.

சத்திவணக்கம்.

இரவிக் கொளிபோ லிறையொடுநின்ற வளைப்
பரவிப் பணிவாம் பதம்.

இது அச்சிவனோடு தாதான்மியப்பட்ட சத்திவணக்க முணர்த்துகின்றது.

(ப-ரை) இரவிக்கொளிபோல்—சூரியனின்றும் அவனது கிரணம் எப்படி வேறுகாதோ அப்படிப்போல, இறையொடுநின்றவளை—சிவபிரானோடு அபின்னையாய்ப் பிரகாசிக்கும் பேரொளியாகியபராசத்தியை, பரவி—துதித்து, பதம்பணிவாம்—அவளது திருவடிகளை வணங்குவாம்.

இப்பராசத்தியின் சொரூபம் ஞானமாய் சிற்கனமாயிருக்கும்; அவள் தொழில் வேறுபாட்டால் திரோதானசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி எனப் பலபெயர்பெற்று நிற்பள்.

கிருத்தியத்தைத் திருவுள்ளத்துடைப்பது பராசத்தி. ஆத்துமாக்களுக்கு போதத்திற்பாசம் வருவித்து முத்தியிலும் வியாபிப்பது திரோதான சத்தி.

மலத்தை நீக்கிச் சிவத்துவத்தை அளிக்கவேணுமென்ற கருணையே இச்சாசத்தி.

சிவத்துவத்தையளித்தற்கு வேண்டிய உபாயமெல்லாம் உணர்த்துவது ஞானசத்தி.

அவ்வுபாயத்தின்வழி நடத்துவது கிரியாசத்தி.

இச்சத்திகள் இறைவனது ஆணைவழிநின்று பஞ்சகிருத்தியங்களைச் செய்வனவாம். அதனால் இறைவன் விகாரியலன். அது, சூரியனது கிரணங்கள் தாமரை அலரவும் சலம்வற்றவும் காந்தக்கல் கனல்கக்கவுஞ்செய்தபோதினும், சூரியன தாக்கற்று நிர்விகாரியாய் இருத்தல்போல் என்க.

நந்திமுதலியோர் வணக்கம்.

நந்திபத நந்திமா காளரெழு வாயாமவர்
தந்திருத்தா ளும்பணிவாஞ் சார்ந்து.

இது குருவணக்கமுணர்த்துகின்றது.

(ப-ரை.) நந்திபதம—சிவகணங்களுக்குத் தலைவராகிய திருநந்தி தேவரது திருவடிகளையும், நந்திமாகாளர் எழுவாயாயவர் தந்திருத்தாளும்—நந்திமாகாளர் முதலாகவுள்ள எழுவர் யாவரோ அவர்கள் திருவடிகளையும், சார்ந்து பணிவாம்—மனத்தின்கண் தியானித்து வணங்குவாம்.

சிலாதார் புத்திரராகிய நந்திதேவர் உருத்திரசமய தியானத்தினாலே அருள்பெற்று யாவருக்கும் ஞானகுருவாய் எம்பிரான் திருமுன் நிற்கும் பெரும்பேறெய்தினார்.

இவரினின்றும் மற்றைய குருசந்தானம் வந்தமையை உண்மை நூல்களாலுணர்க.

நந்திமாகாளர் முதலியோரும் சிவகணத்தலைவராவார்கள். அவர்கள் நந்திமஹாகாளர், பிருங்கி, இடபம், கந்தர், சண்டன், விநாயகர், பார்வதி என்னும் எழுவர்களாம்.

உம்மை எண்ணின்கண் நின்றது.

பதிபசு பாசந் தொகுத்துப் பகர்வா
மேதுகதியென் பார்க்கெளிதிலே.

இது பாயிரத்தின் பொதுவிலக்கணமுணர்த்துகின்றது.

(ப-ரை.) ஏதுகதியென்பார்க்கு—பரமுத்தி எய்துதற்கு (எது உண்மை மார்க்கமென்று அறிய) அவாவுறும் உத்தமர்க்கு, பதிபசுபாசம்—சிவாகமத்தில் விரிந்தெடுத்தோதிய ஞானபாதத்திற் கூறப்பெற்ற திரிபதார்த்த இயல்பை, தொகுத்து எளிதில் பகர்வாம்—தொகுத்துச்சுட்ட லென்னும் உத்திகொண்டு (தமிழில்) இலேசான முறையிலமைத்துக்கூறுவாம்.

"பதிபசுபாசந் தொகுத்து" எனவே, நூலினது பெயரும், நூல்யாப்பும், நுதலியபொருளும், நூல்வந்தவழியும், "ஏதுகதியென்பார்க்கு" எனவே காரணமும் கேட்டற்குரிய அதிகாரியும் பயனும் விளங்க உணர்த்துதலையறிக.

தமிழ்வழங்குமெல்லையே எல்லையாம்.

"எளிதிற் பகர்வாம்" என்றமையால் வகைவிரியா லெடுத்தோதிய வல்லார்போற் கூறுதற்கு வலியிலேனாயினும், அவரது கருத்தைப்பற்றியே சுருங்கிய இத்துறளடியாற் றொகுத்துக் கூறுகின்றேன் என்னுங் கருத்தால் அவையடக்கமும் உய்த்துணர வைத்தலறிக.

பதி-தலைவன், நாயகன். பசு-பாசத்தளையிற்கட்டுண்ட ஆன்மா.
பாசம் ஆன்மாவைப் பந்தித்த பிணிப்பு. கதி-மோக்ஷம், புகலிடம்.

பாயிர முற்றிற்று. ஆகச்செய்யுள் 5.

S. பால்வண்ண முதலியார்.

இதோபதேசம்.

திவ்யஸ்தல யாத்திரைகளினாலும், புண்ணியதீர்த்த ஸ்நானங்களினாலும், மாணிக்கம் வைரம் பொன்னாதியாற் செய்யப்பட்ட விக்கிரகாராதனைகளினாலும், அனேகவித விரதாசரணைகளினாலும் காயக்கிலேசஞ்செய்து (சரீரத்தைவருத்தி) புனிதமுறுவதைக் காட்டிலும் முக்குற்றமுமற்று சர்வமும் தானாய் விளங்காநின்ற மகான்களது தரிசனையால் இகபர சாதகத்தையும் மேலான மோக்ஷத்தையும் எளிதில் அடையலாம்.

"எங்கும் பொதுவாயிருக்குமொருசிவன் முத்தர்
தங்குமிடந்தானே தலைவாசம்—அங்கவர்கள்
பார்வையே தீர்த்தமவர் பாதாரவிந்தமலர்ச்
சோலையே சாயுச்சியம்".

பாலுநீருங் கலந்ததில் நீரைப்பிரித்துப் பாலைமட்டும் உண்டுகளிக்கும் அன்னப்பக்ஷியைப்போன்று உண்மையுணர்ந்த ஞானிகள் வாசனாத்திரயங்களாகிய லோகவாசனை, தேகவாசனை, சாஸ்திர வாசனைகளில் உழல்பவர் போற்காணினும் சாரமாயுள்ளவைகளில் மாத்திரம் மனதைச் செலுத்தித் தங்கள் சுவானுபூதியிலுதித்த தத்துவார்த்தத்தை நம்மனோர்களுமறிந்துய்யும்படியாய் வெளியிட்டுக்களித்திருப்பர்.

"நல்லவனேகேளுலகுய காரஞானிகள் விவகார
மல்லது வேறொரு பெறுபேறுமில்லை யதனாற் பிணியுமில்லை".

முதலாவதாகிய இளமைப்பருவத்தில் படிக்கவேண்டியவைகளைப் படிக்காமலும், இரண்டாவதாகிய குமாரப்பருவத்தில் நல்வழிகளிற் பொருளையீட்டிப் பரோபகாரஞ்செய்யாமலும், மூன்றாவதாகிய தருணப்பருவத்தில் உணர்ந்தபடி யடங்கி ஆத்மஞானத்தை யடையாமலும் காலத்தை வியர்த்தமாக்கினால் நான்காவதாகிய முதுமைப்பருவத்தில் எமனுக்காட்படுதலைத்தவிர வேறென்பெறுவன்? இவன்பிறப் பென்பிறப்போ?

"அடையவேண் டியதடைந்து மேற்றுயர மற்றின்ப மளவிலாதாய்க்
கடையதாந் தருவிலங்கு பறவைகள்போல் வீணாட்கள் கழியாதாகித்
தடையில்லா மனனத்தால் வாழ்வதே யுயர்வாகுஞ் சனனந்தீர்ந்தோ
ருடையபிறப்புயர்ந்ததாங்கிளவேசரிப்பிறப்பாமொழிந்தவெல்லாம்".

காமிதார்த்தத்தைக் காமதேனுவும், சிந்திதமனோரதத்தைச் சிந்தாமணியும், கற்பித்துக்கொண்டதைக் கற்பதருவுந்தரும். ஆத்மானாத்மவிவேகஞானியின் கூட்டுறவோ சர்வாபீஷ்டத்தையுந்தரும். "அறக்குறைவை நிறைவாக்குஞ் சம்பததாக்கு மாபத்தைச் சுபமாக்கு மகாபத்தனிசை சிறக்குமுயர்ந் தவர் கூட்டம் * * *".

ஆகாரம், நித்திரை, விஷயம், பயம், சோகதாகம் ஸர்வஜீவராசிகளுக்குமொரே படித்தாயிருந்தாலும் பகுத்தறியும் ஞானம் மனிதர்களுக்கே யுரித்தானதால் ஸர்வஜீவராசிகளிலும் சிரேஷ்டமானவன் மனிதனெனப்படுவான். மனிதனுக்கு ஆத்மஞானமில்லையானாலோ கேவலம் பசுவோடொப்பாக மதிக்கப்படுவான்.

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு".

M. R. ஸ்ரீநிவாஸசர்மா.

ஸ்ரீபரமஹம்ஸ சிவநாராயண சுவாமிகள்

சிவநாராயணசுவாமிகள் இப்பரதகண்டத்தில் வடமேற்கு மாகாணத்திற் பிராமணகுலத்தில்வாசுதேவர் கங்காதேவி யென்பவர்களுக்குப் புத்திரராய்த் திருவவதாரம் செய்தார். இவருடன் பிறந்தோர் நால்வர். இவர் குடும்பத்தைப்பற்றிய ஏனைய விபரங்கள் நன்குவிளங்கவில்லை.

சுவாமிகள் ஐந்து வயதாயிருக்கும்போதே பின்வருமாறு தனக்குள்ளே ஆலோசிப்பார் "நான் யார்? என்னுடைய எதார்த்த சுபாவம் என்ன? ஜனங்கள் கடவுள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்களே அக்கடவுள் யார்? அவரை வணங்குவதால் பயன்யாது? இதுவரை நான் எங்கேயிருந்தேன்? இனிமேல் நான் செல்லவேண்டியது எவ்விடம்? அவ்விடத்தில் யான் செய்யவேண்டுவது என்ன?" சில சமயங்களில் அவர் தம்மைத்தாமே கேட்டுக்கொள்வதாவது:—"இவ்வுடம்பையும் அதனோடு தத்தம் தொழில்களைச்செய்யும் அவயவங்களையும் செய்தவர் யாவர்? நானு அல்லது என் பெற்றோர்களா? என்னால் செய்யப்பட்டதெனின் நான் செய்த தொழில் எனக்கே என் ஞாபகமில்லை? இவ்வுடலை என்னிஷ்டப்பிரகாரம் என் மாற்றக்கூடவில்லை? தவிரவும் இப்பேர்ப்பட்ட விஷயங்களைப்பற்றி எனக்கு ஐயமுண்டாவதற்குக் காரணந்தான் யாதோ".

இவவண்ணம் நாடோறும் சஞ்சலப்பட்டுக்கொண்டிருக்கும் பாலர் ஒருநாள் தன் அன்னையிடம் சென்று "அம்மா இக்தவுடம்பை நீர்தான் செய்தீரா? அல்லது வேறு யாராவது செய்தார்களா? அப்படிவேறு யாரோனும் செய்தாராயின் அவரை எனக்குக் காட்டுக" என்றனர். இதைகேட்ட தாயார் திடுக்கிட்டு "குழந்தைக்கு ஏதோ புத்திமாருட்டம் உண்டாய்விட்டதே. ஐயோ!" என்று மிகவருந்தி தன்னுடைய மற்றொரு புத்திரனான இலட்சுமி நாராயணனையழைத்து "அப்பா! இதுசங்கதியை உன் பிதாவிடம் தெரிவிக்கவேண்டும், அவரை யிங்கு விரைவாய் அழைத்துவா" என்று ஆக்ஞாபித்தாள்.

அங்ஙனஞ் சென்ற சகோதரரும் தன் பிதாவிடம் சென்று, தன் அன்னை சொன்னவண்ணம், அவரை விரைவில் அழைத்துவந்தார். வாசுதேவரும் புத்திரன் பேசின விஷயங்களைக்கேள்வியுற்று மதிகலங்கி, பின்னர் ஒருவாறு தெளிந்து, மதியீனமாய்ப் பிதற்றியதாய் மதித்துத் தனது புத்திரனைக் கண்டித்தார். அப்பால் தங்களுடைய குடும்ப உபாத்தியாயரை யழைப்பித்து அவர் தன் பாலனை நன்றாய்க் கவனிக்கும்படி தக்க ஏற்பாடுசெய்ததுமன்றித் தானும் அவருக்கு பக்தியுண்டாக்கக்கூடியவிஷயங்

கலையெடுத்துரைத்துவந்தனர். ஆனால் பையனுடைய எண்ணமும் சிந்தனையுமோ வேறுவிதமாயிருந்தன. நாளுக்குநாள் உணர்ச்சியும், மனோ திடமும், எதார்த்த ஞானமும், ஆனந்தமும் அதிகரித்தன. உபாத்தியாயரோ பையனை மிககொடுமையாய்க் கண்டித்துவந்தார்.

இவ்விதம் கண்டித்துவந்ததில் சிவநாராயணருக்குப் பலவிதமான எண்ணங்கள் தோன்றின. "கல்வியினாலுண்டாகும் பிரயோஜனம் நன்றாயறிகிறேன். ஆனால் என் மனதிலிருக்கிற விஷயம் உபாத்தியாயருக்குப் புலப்படவில்லையே. அவர் என்னைத்தண்டிப்பதில் மிகக்கண்ணாயிருக்கிறாரேதவிர எதார்த்தமாய் என்னுடைய மனதையறிகின்றிலரோ. அன்னபானஞ்செய்வதிலும் இறப்பதிலும் கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் யாதாயினும் பேதமுளதோ? இல்லையே. இருவர்களுக்குமிருக்கும் வித்தியாசம் யாதெனின் யதார்த்த மிதுவென்றும் பொய்யிதுவென்றும், அஞ்ஞானமிதுவென்றும் நல்லறிவிதுவென்றும் கற்றவன் உணர்கிறான்; உலகவிஷயமாயும் ஆத்மார்த்தமாயுமுள்ள தனது கடமையை அறிகிறான். கல்லாதவனோ அப்படியறிய, சக்தியற்றவனாகின்றான். இவ்விதமறியக்கூடிய கல்வியைக் கற்றவனே கல்விகற்றவனாவான். வேறு விஷயமான கல்வியெல்லாம் திரவியம் சம்பாதிக்கவும் வீண் கர்வமுண்டாக்கவும் ஹேதுவான போலிக்கல்வியே. கற்றவர்களும் கல்லாதவர்களும் தங்கள் பிறப்புக்கு [illegible] தங்கள் நிலைமை யின்னிலைமை யென்றும் இறப்பிற்குப்பின் இந்நிலைமை யென்றும் அறியக்கூடாதவர்களே. நித்திரை செய்யும்போது, படித்தவர்கள் தாங்கள் படித்தவித்தையை அறிவதற்கும், படியாதவர்கள் தங்களறிவின்மையை யுணர்வதற்கும் இடமில்லாதபடி யிருக்கிறார்கள்" என்றும், இன்னுமிவைபோன்ற பலவுஞ் சிந்தனைசெய்துவருவார்.

இவருக்கு எட்டு அல்லது ஒன்பது வயதில் உபநயனஞ்செய்யப்பட்டது. "ஆடுமாடுகட்குக் கழுத்திலிடுங் கயிற்றைப்போல் எனது பெற்றோர்கள் என்றோளில் இந்நூலை யேன் போடுகிறார்கள். கடவுள் இப்படிப் போடும்படியாய்க் கட்டளையிடவில்லையே. அவர் கருத்து அவ்வணமிருப்பின் மற்ற அவயவங்களைப்படைத்த அவர் இந்நூலையும் உடலுடனேயுடன் தோன்ற ஏன் செய்திருக்கமாட்டார்? யதார்த்தமுணர்ந்தோர் இது கடவுளுடைய ஆக்ஞையென்று ஒருபோதும் சொல்லமாட்டார்கள். சன்னியாசிகள் காவிவஸ்திரந்தரிப்பதுபோலவே இப்பூணூலிடுவதும் சிலமாந்தர்கள் தங்களைப்பேதப்படுத்திக்கொள்ளவேண்டுமென்று செய்துகொள்வதுதான். இவ்விதம் தோற்றுவித்துக்கொள்ளும் பேதங்களை யறவே யொழித்து யதார்த்தமாக உடலுக்குடலிருக்கும் பேதமின்மையையும் அவயவங்கள் ஐம்பொறிகள் இவைகளின் செய்கைகளையும் நீர் ஆலோசிக்கின்,

மானிடர்களுக்குள் யாதொரு வித்தியாசமுமில்லையென்பது தெளிவாயிருக்க, இவ்வேற்றுமையைக் கற்பிப்பது மனிதனுடைய செயலேயன்றி வேறென்ன?" என்று பற்பலவிதமாய் அவராலோசித்து, பூணூலைப்பற்றிய விவகாரங்களையினியொருசமயம் யோஜிக்கலாமென்றெண்ணித் தமது தகப்பனுருக்கு யாதொரு வருத்தத்தையும் உண்டுபண்ணாதபடி தம்மனதிற்றோன்றியவைகளையெல்லாம் தமக்குள்ளே யடக்கிக்கொண்டு, விடாமுயற்சியாய்ப் பக்தியே அப்பியாசஞ்செய்துகொண்டிருந்தார். பின்பு "சாதுக்கள், மஹாத்துமாக்கள், சன்னியாசிகள் என்றும், இன்னும் இவைபோன்ற பல நாமங்களைக்கொண்டும் ஜனங்கள் சிலரையழைக்கிறார்களே; யாதுகாரணம் பற்றியோ? அப்பதங்களின் தாற்பரியம் என்ன?" என்று பலவாறு உசாவி வருங்காலத்திலொருநாள் தாமிருந்த குக்கிராமத்தினருகே ஒரு பெரிய மகாத்மா ஒருவர்வந்திருப்பதாய்க் கேள்வியுற்று, அங்குச்சென்று அவர் தன்னந்தனியாயிருக்கும் சமயம்பார்த்து அவரையண்டி நமஸ்கரித்து, தம்மனதிற்றோன்றிய சில சந்தேகங்களை நிவிர்த்திசெய்யும்படி அவரைவேண்டிக்கொண்டு, "ஐயா! 'சாது' வென்றும் 'சாமி' யென்றும் 'மகாத்மா' வென்றும் பல நாமங்களாலழைக்கப்படும் சன்னியாசி யென்பவர் யாவர்? இப்படியழைப்பதின் தாற்பரியமென்ன? சாதாரண மனிதனுக்கும் சன்னியாசிக்கும் உடலிலும் அவயவத்திலும் யாதொரு வித்தியாசமுமில்லையே; சன்னியாசிகளிருக்கும் விசேஷகுணமென்ன? வித்தியாசம் பேச்சிலிருக்குமோவெனின் மற்றவர்கள் அவ்விதம் பேசவுங்கூடுமே. மண்ணையும் சாம்பலையும் மேலே பூசுவதென்றால் பன்றிகள் எருமைகள் இவைகளுக்கும் சன்னியாசிக்கும் வித்தியாசமில்லையே. சடையிருப்பதனால் சன்னியாசியென்றால் ஆலமரத்திற்கும் இவருக்கும் பேதமென்னை? மற்று சன்னியாசியென்பதொரு பொருளாயின் அப்பொருள் சிவப்போ, கருப்போ அல்லது வெள்ளையோ? இவையொன்றும் அறிகிலேன். தாங்கள் என்பேரில் பரிபூரண கிருபைசெய்து என் சந்தேகத்தை நிவிர்த்திசெய்ய வேண்டும். ஜனங்களெல்லாரும் தங்களையொரு பெரிய சன்னியாசியென்று சொல்வதால் தங்களிடம் எனது சங்கையைத் தெரிவித்து நிவிர்த்திக்கவந்தேன்" எனப் பணிந்து கேட்க, சன்னியாசிக்குக் கோபாக்கினிமூண்டு "அடா நீ நேற்றுப்பிறந்தபயல். நீ என்னைப் பரிகாசஞ்செய்கிறாயா" என்று சொல்லித் தமதுகையிலிருந்த ஓர்கம்பை ஓங்கி அவரை இரண்டொரு அடியடித்தார். சிவநாராயணர் மிகவும் வணக்கமாய் அவருக்கு வேண்டிய சமாதானங்களைச் சொல்லியும் அடித்துத்துரத்தப்பட்டவராய, தமது பிதாவிடஞ்சென்று நடந்த சங்கதியைச்சொல்ல இவர் மற்றவரினும் மிகக்கோபங்கொண்டு சிறுவரை யதிகக்கொடுமையாய்த் தண்டனைசெய்தார். பின்னர் இவ்விதமாக சிவநாராயணர், உலகத்தைத் துறந்தவராகவரும் அநேக

சந்நியாசிகளிடத்தில் தம்முடைய சந்தேகங்களை நிவிர்த்திக்கச் சென்றதி லும் அவர்களெல்லாரும் கொடிய கோபமுடையவர்களாகவும் ஏதேனும் சந்தேகத்தை நிவிர்த்திக்கப் பிரார்த்தித்தால் அடிக்கவருபவர்களாகவு மிருப்பதைக்கண்டார்.

இங்ஙனம் சிலநாட்சென்றபின் அவ்வூருக்கு வேறொரு சாது விஜ யஞ்செய்தனர். ஆனால் இவருக்கும் முன்னமே சந்தித்த சாமிமார்களுக் கும் நிரம்ப வித்தியாசங்கள் இருந்தன. இவர் மிகவும் சாந்தராயும், சந் தோஷமுடையவராயும், உண்மையையறியக்கூடியவராயும், நியாயமுடை யவராயும், கடவுளிடத்தில் சதாபக்தியுடையவராயுமிருந்தார். முன்கண் ட சன்னியாசிகளைக்கேட்ட சிவநாராயணர் மறுபடியும் மனந்தேறித் தமது சந்தேகங்களை இவரிடமுங் கேட்கவே, அவரிவரைப்பார்த்து "அப் பா, இப்பேர்ப்பட்ட சந்தேகங்கள் உன்மனதிலுண்டானது எங்ஙனம்?" என்று கேட்க, இவர் இயற்கையா யுற்பத்தியாயினவென்று விடையளித்த தின் பேரில் சன்னியாசி ஆனந்தபரவசராய் "அப்பா, இவை என்னால் நிவிர்த்திசெய்ய முடியா. இச்சந்தேகங்களை உன் மனதிலுதிப்பித்தவரே உனது பக்குவகாலத்தில் அவைகளை நிவிர்த்திப்பார்" என்று சொல்லி அவரையும் அவர் பிறந்த குடும்பத்தையும் சிலாகித்துப்பேசி வேண்டிய உபசாரஞ்செய்தார். சிவநாராயணரும் அவரை நமஸ்காரஞ்செய்து அவ ரிடம் விடைபெற்றுத் தமதில்லம் ஏகினர்.

பின்பு ஒருநாளிரவிற் றனது தாய் தந்தையரிடம் வந்து நமஸ்க ரித்து எழுந்து கைகூப்பி நின்றுகொண்டு "பெற்றோர்களே! உங்களுக்கு என்னைப்போலவே நான்குமக்களிருக்கிறார்கள். அதில் ஒருவனாகிய நான் இறந்துவிட்டதாய் நீங்கள் எண்ணிக்கொள்ள வேண்டுகிறேன். எங்கும் வியாபகராயிருக்கும் கடவுளின் ஆக்ஞையின் வண்ணம் உலகத்தோரின் துன்பங்களை நிவிர்த்திசெய்யும் பொருட்டு நான் வெளியேபுறப்பட்டுப் போகிறேன். எல்லோருடைய நன்மைக்காகவும் நான் பாடுபடவேண்டு மென்று ஜெகதீசனால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறேன். ஆகையால் நான் இத்திருப்பணியிற் சென்று வரும்படி மனப்பூர்வமாய் விடையளியுங் கள்" என்றனர். இதுகேட்ட தாய் தந்தையர் திடுக்கிட்டு மனங்கலங்கி "அப்பா உன்னால் சொல்லப்படும் காரியங்கள் யாவும் நீ செய்துமுடிக்க வல்லவனோ? ஒருபோதும் போகக்கூடாது. அப்படி யுனது தீர்மானம் போகவேண்டுமென்றிருப்பின் எங்களை முதலில் நீ கொன்றுவிட்டு அப் பால் எங்கேனும்செல்" என்று வியசனத்தோடும் விடையளித்தனர். அதற்குச் சிவநாராயணர் "உலகத்தாரின் கஷ்டத்தை நான் எங்ஙனம் நிவிர்த்தி செய்யப்போகிறேனென்று தாங்கள் சொல்வது யதார்த்தமே,

ஆனால் நானாக ஒன்றும்செய்யத்தகுந்தவனல்லவில்லையே. கடவுள் தாம்செய்ய வேண்டியவேலையை என்னைக்கருவியாகக்கொண்டு நடத்துகிறார். ஆதலின் என்னிடம் இனிப்பிரியம் வையாதீர்கள். தயைசெய்து உத்திரவளியுங்கள்" என்று மறுத்துஞ்சொல்ல அவர்கள், "பெற்றோர்கள் யாரேனும் தங்கள் பிள்ளையை இப்படி யனுப்புவார்களா? தவிரவும் நீயோ கல்வியில் அதிகத் தேர்ச்சி யில்லாதவன். உன்னால் யாதுதான் செய்யமுடியும்" என்று ஆட்சேபித்தனர். சிறுவரோ பின்னும் "சகலருடைய மனதிலும் குடிகொள்ளும் கடவுளே எனக்குக் கல்வி; சாதாரண உலகக்கல்வி சம்பாதிக்க எனக்கு இஷ்டமில்லை" என்றியம்பினார். இவ்வாறாக, தம்மால் இயன்றவரையும் சிவநாராயணர் எடுத்துரைத்தும் பயன்படவில்லை. பெற்றோர்களோ பிள்ளையைவிட்டுப்பிரிய, சம்மதிக்கவில்லை. ஆகவே உண்மையாக அவரைப்படைத்த பிதாவின் கட்டளையை நிறைவேற்றி அவரைச் சந்தோஷப்படுத்துவதற்கு இவ்வுலகின் பெற்றோர்கள் சம்மதம்கொடுத்தார்களில்லை. 'கடவுளே எல்லோருக்கும் கடவுளாயிருக்கிறார்; அவரைக் கேட்ப்படிவதே எல்லோருக்கும் கீழ்ப்படிந்து நடப்பது' என்றெண்ணி, பதின்மூன்று வயதுள்ள இப்பிள்ளை ஒருநாள் நள்ளிரவில் திடசித்தராய்த் தமது தாய் தந்தையருடைய ஆச்சிரமத்தினின்றும் நீங்கி உலகததோரிடத்துப் பேரன்புபூண்டு ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு வெளியேறினார்.

"அன்பிலாரெல்லாம் தமக்குரிய ரன்புடையா
ரெனபு முரியர் பிறர்க்கு"

(இன்னும்வரும்)

C. P. சுப்பையாபிள்ளை, B. A.

ஜடபரதர் சரித்திரம்.

மனுவம்ச இராஜர்களி லொருவராகிய 'நாபி' என்னும் பெயரையுடைய இராஜாவுக்குப் புத்திரப்பேறின்மையின் எக்ஞபுருஷனென சாக்ஷாத் பகவானை எக்கியங்களினால் ஆராதிக்க, பகவானானவர் திரவியம், தேசம், காலம், மந்திரம், கிரியை, ரித்துக்கள், தெட்சணையென்று சொல்லப்படும் வேதோத்தமங்களான உபாயங்களின் சம்பத்தினாலே அடையக்கூடாதவராயிருந்தாலும், பக்தர்களுடைய அன்பு வலையிற் சிக்குபவராதலின் அவருடைய தபசுக்கிரங்கி, தாமே அவருக்குப்புத்திரனாக ஜெனிததார். அவருக்கு ரிஷபன் என்னும் பெயரைத்தரித்து, இராஜ பட்டாபிஷேகமும் சூட்டி, அவருடைய மாதா, பிதாக்களிருவரும் வானப்பிரஸ்தாசிரமத்தையடையவேண்டி பதரிகாசிரமததை நோக்கிச்சென்றபின், ரிஷபர் இராச்

ரியபாரத்தை வகித்து முறைப்படி செங்கோல்செலுத்திவரும் நாளில் தம்முடைய பத்தினியாகிய ஜெயந்தியினிடத்தில் தமக்குச்சமானமான நூறு பிள்ளைகளைப் பெற்றார். இந்த ரிஷப புத்திரரான நூறுபேரில் ஜேஷ்ட புத்திரரான பரதர் சிரேஷ்ட குணங்களையுடையவராயிருந்தார்.

புத்திரர்களுடைய குணவிசேஷத்தையும் நல்லொழுக்கத்தையும் நோக்கி மிகவும் சந்தோஷித்தவராய், ரிஷபர் என்பவர் ஓர்நாள் தமது புத்திரர்களைப் பார்த்துப் பின்வருமாறு உபதேசித்தார்.

"வாரீர் புத்திரர்களே! ஊன்றியாலோசிக்குங்கால் இந்த லோகத்திலே அசுத்த போசிகளான பன்றி முதலிய பிராணிகளைப்போல் மனுஷிய சரீரமானது பின்னால் கிலேசத்தைக்கொடுக்கிற விஷய போகங்களை அனுபவிப்பதற்கு உரியதல்ல. ஆனால் சிரேஷ்டமாயும் பகவதாராதன ரூபமாயுமிருக்கிற தபசுக்கு யோக்கியமாகவிருக்கிறது. யாதொரு தபசினால் சத்துவகுணம் பரிசுத்தமாய் விளங்குகிறதோ, அப்படிப்பட்ட சுத்த சத்துவத்தினால் ஆனந்தமான பிரம்மானந்தரூபமோட்சம் சித்திக்கிறது. அம்மோட்சப்பிராப்திக்குப்பெரியோர்களுடைய சேவையை உபாயமாகச் சொல்லுவார்கள். ஸ்திரீகளின்மேல் மையல்கொண்டுதிரியும் விடபுருஷருடைய சாவகாசத்தை நரகத்துக்கேதுவாகச் சொல்லுவார்கள். சதாசார சம்பன்னராய், பூததயையுடனே கூடினவர்களாய், கோபமில்லாதவர்களாய், சாந்தராய் பசுவாதி சகல பிராணிகளிடத்திலேயும் ஞானானந்தமயனான ஆத்மாவே வசிக்கிறானென்றுணர்ந்து, அவைகளிடத்தில் சமபுத்தியுடையவர்களாய், யாவர் இருக்கின்றார்களோ அவரையெல்லாம் மகத்துக்களென்றறியுங்கள். ஈசனும் அந்தர்யாமியாயிருக்கப்பட்ட பகவானிடத்திற்பண்ணும்பிரீதியையே பரமபுருஷார்த்தமாகவுடையவர்களையும், தேகத்தைப் போஷிப்பதில் மாத்திரம் கண்ணுயிருப்பவர்களிடத்தும், பாரியா புத்திர மித்திரர் இவர்களுடனே கூடின கிரகங்களிடத்தும் பிரீதியில்லாமலிருக்கிறவர்களையும், தேகதாரணத்துக்கு வேண்டியதெவ்வளவோ அவ்வளவை மாத்திரம் கைக்கொள்பவர்களையும் மகத்துக்களென்றறியுங்கள்.

"எந்தப்புருஷன் இந்திரியப் பிரீதிக்காக முயற்சிக்கிறானோ அந்தப் புருஷன் விவேகமில்லாதவனாய், நிச்சயமாக விபத்தையடைகிறான். பூர்வ ஜென்மத்திலே செய்யப்பட்ட யாதொரு கர்மத்தினால் துக்கத்தைக் கொடுக்கின்ற அசத்தான இந்த தேக முண்டாகிறதோ அப்படிப்பட்ட கர்மத்தைத்திரும்பவும் செய்வது நல்லதென்று நான் நினைக்கவில்லை. எந்தமட்டும் ஆத்ம தத்துவத்தையறியவேணுமென்று இச்சியாமலிருக்கின்றானோ அந்தமட்டும் தேக சம்பந்தத்தினாலே ஞானமயமான தன் யதார்த்த சொரூபத்தில் திரஸ்காரமுண்டாயிருக்கும். கர்ம சுபாவமான மனதினால்

திரும்பவும் தேக சம்பந்தமுண்டாகிறது. புருஷன் விவேகமில்லாதவனாய், உத்தம புருஷார்த்தமான மோக்ஷத்தையடையச் சிறிது முயற்சியாமல், இந்திரிய வியாபாரங்களையே புருஷார்த்தமென்று எப்போது பார்க்கிறானோ, அப்போது சொருபக்கியான ஞனியனாய், மூடனாய், மிதுன சுகத்தையுடையதான நரகத்தையடைந்து, நானாவித தாபங்களையடைகிறான். புருஷனுக்கு ஸ்திரீயோடுள்ள ஏகாந்த சங்கத்தைப் பந்தமென்று சொல்லுவார்கள். இந்த ஏகாந்த சங்க ரூபமான இருதய பந்தத்தினாலே ஜனங்களுக்கு கிரகம், க்ஷேத்திரம், பிள்ளைகள், பந்துக்கள், தனம் இவைகளிடத்தில் என்னுடையதென்றும், நானென்றும் மகாமோகமுண்டாயிருக்கிறது. எவன கர்மத்தினாலே கட்டப்பட்டும், திடமாயுமிருக்கிற இந்த இருதயக்கிரந்தியை உதறிவிடுகிறானோ அவன் ஸ்திரீயோடுள்ள ஏகாந்த சங்கத்தினின்று மொழிந்து, முத்தனாய், பரமாத்மாவையடைகிறான்.

“வாருங்கள் புத்திரர்களே! நிர்மலனாயும் குருவாயுமிருக்கிற என்னிடத்தில் பக்தியினாலேயும், நிரந்தர சேவையினாலேயும், ஆசையில்லாமையினாலேயும், சீதோஷ்ண சுகதுக்காதிகளை சகிக்கிறதினாலேயும், பிராணிகளுடைய துக்கத்தைக்கண்டு துக்கிக்கையினாலேயும், ஆத்ம விசாரத்தினாலேயும், தபசினாலேயும், காமிய கர்மங்களைவிட்டதினாலேயும், பகவதாராதன கர்மங்களினாலேயும், சர்வபூத சாமியத்தினாலேயும், சாந்தியினாலேயும், சரீரம்-கிரகம் முதலானதுகளிலே என்னுடையதென்கிற புத்தியில்லாமையினாலேயும், வேதாந்த சாஸ்திர அப்பியாசத்தினாலேயும், பிராண இந்திரிய மனோஜெயத்தினாலேயும், திடமான சிரத்தையினாலேயும், பிரமசரியத்தினாலேயும், வாக்கு நியமத்தினாலேயும், ஞானயோகத்தினாலேயும் சமர்த்தனான புருஷன் அகங்காரத்தினின்றும் மொழியக்கடவன். மூடமான இந்த ஜென்மமானது அற்ப சுக நிமித்தியமாய் ஒருவருக்கொருவருண்டாகிற விரோதத்தையும், அனந்தமான துக்கத்தையும் அறிகிறதில்லை. சமுசாரத்திலேவிழுந்து தபித்துக்கொண்டிருக்கிற புருஷனைப் பக்திமார்க்கத்தையுபதேசித்து எவன் விடுக்கவில்லையோ அவன் குருவன்று.

“வாருங்கள் புத்திரர்களே! சேதனாசேதனமான பிராணிகளுக்குள்ளே நத்தைகள் உத்தமம். அவற்றிலும் சர்ப்பங்கள் உத்தமம். அவற்றிலும் பூதப்பிரேத பசாசங்கள் உத்தமம். அவற்றிலும் மனுடர் உத்தமர். அவரிலும் கந்தருவர் உத்தமர். அவரிலும் சித்தர், கின்னரர் உத்தமர். அவரிலும் அசுரர் உத்தமர். அவரிலும் தேவர் உத்தமர். அவரிலும் இந்திரன் உத்தமன். அவனிலும் பிரம்ம புத்திரர்களான தட்சன முதலானபேர் உத்தமர்கள். அவர்களோ மும்மூர்த்தி வடிவமாகிய என்னைச் சரணமாக அடைந்திருக்கிறார்கள். நானோ பிரம்ம ஞானிகளையே தெய்வமாகவுடையவன். அவர்களுக்குச் சமமாக வேறொரு பிராணியைச்சொல்லமாட்டேன்.

"வாருங்கள் பிள்ளைகளே! மச்சரம் முதலான பேய்க்குணங்களில்லாத திருஷ்டியையுடையவர்களான உங்களாலே சராசரங்களான சமஸ்த பூதங்களும் என்னுடைய சரீரமாக அடிக்கடி பாவிக்கத்தக்கதுகள். அதுவே எனக்குத் திருப்தியான ஆராதனம். மனது, வாக்கு, திருஷ்டி மற்றுமுண்டான இந்திரியங்கள் இதுகளுடைய வியாபாரங்களுக்கு என்னுடைய ஆராதனமே பிரத்தியக்ஷமான பலம்; என்னுடைய ஆராதனத்தையன்றி வேறுபாயங்களால் மகாமோகமான சம்சாரபயத்தில் நின்றும் எந்தப் புருஷனும் தன்னை விடுவித்துக்கொள்ள, சமர்த்தனாக மாட்டான்".

பிள்ளைகள் ஸ்வயமாகவே தெரிந்தவர்களாயிருந்தாலும் லோக சிக்ஷார்த்தமாக அவர்களுக்கு இந்தப்பிரகாரம் உபதேசம் செய்தபின்னர் ரிஷபனென்று பெயரையுடையவரான பகவான், தம்முடைய பிள்ளைகளுக்குள்ளே சிரேஷ்டராயும், பரமபக்தராயும், பக்தாளையே கதியாகவுடையவராயுமிருந்த பரதரைப் பூபரிபாலனத்தின்பொருட்டுப் பட்டாபிஷேகம் பண்ணிவைத்து, தாம் கிருகத்தைவிட்டு வெளிப்பட்டு, பித்தனைப்போல திகம்பரராய், மூடன், அந்தகன், ஊமை, செவிடன், பிசாசம், குழந்தை இவர்களைப்போல வேஷத்தையுடையவராய், ஜனங்களினாலே அழைக்கப்பட்டாலும் மௌனவிரதத்தையுடையவராய், சர்வ பூதங்களுக்கும் அந்தராத்மாவாயும் ஸ்ரீபகவானாயுமிருக்கிற வாசுதேவனிடத்தில் தமக்கு அபேதமானபடியினாலே ஸ்வயமாகவே பிராப்தமாயிருக்கிற ஆகாச கெமனம், அந்தர்த்தானம், பரகாயப்பிரவேசம், தூரத்திலிருக்கிற பதார்த்தத்தைப் பார்க்குதல், கேட்குதல் இவை முதலான யோக ஐஸ்வரியங்களைக் குறித்து மனதிலே சந்தோஷிக்காதவராய், கிராமம், பட்டணம், நகரம், புஷ்பவனம், இடைச்சேரி, பர்வதம் முதலான இடங்களில் சஞ்சரித்துக்கொண்டிருந்தார்.

பரமபக்தரான பரதரோவெனின், பகவானான ரிஷபராலே பட்டாபிஷேகம் செய்துவைக்கப்பெற்றபின் இராச்சியாதிகாரத்திலே சிரத்தையுடையவராய் விசுவரூபருடைய பெண்ணான பஞ்சசேனி யென்கிற ஸ்திரீயை விவாகம்பண்ணினார். அந்தப்பஞ்சசேனியினிடத்தில் தமக்குச்சமானமான சுமதி முதலிய ஐந்து பிள்ளைகளைப்பெற்றார். அசனாபமென்று பிரசித்தமானதும் இமயகிரியை வடக்கெல்லையாயும் கன்னியாகுமரியைத் தெற்கெல்லையாயுமுடைய இந்தக் கண்டத்தை இப்பரதர் பரிபாலனம் செய்துவந்தமையின் அவருடைய காலமுதல் இஃது 'பாரதவருஷம்' என்றழைக்கப்பட்டு வருகின்றது.

(இன்னும் வரும்)

வி. சண்முகம்பிள்ளை

குடியின் கேடு.

பரதகண்டமாகிய இவ்விந்ததேசத்தில் நாகரீகம் நாளுக்கு நாள் அபிவிர்த்தியாகிக்கொண்டுவருகிற தென்பதில் யாவர்க்கு மிகுந்த சந்தோஷமிருந்தாலும், அது "குடியைக்கெடுக்குங்குடி" யையுஞ் சிற்சிலவிடத்து உடன் வளர்த்துக்கொண்டுவருவதில் விவேகிகள் யாவருக்குமுள்ள துக்கமும் மிகுதியே. தற்காலத்தில், நமது ஆரிய சகோதரர்கள் யாவரும் ஐரோப்பிய தேசத்தாருடைய நடையைக்கண்டு பழகமுயன்றதில் அவர்களுடைய நடைகளுள் கபடமின்மை, சமபாவனை, விடாமுயற்சி, தைரியம், ஸ்திரீகளை நடத்தும் முறைமை, சத்தியம் முதலியவற்றில் இன்னும் அவர்க்குப் பிந்தியவரே என்று சிலர்சொல்வரேனும் மதுபானத்தில் மாத்திரம் எத்தேசத்திலுள்ள எச்சாதியர்க்கும் முந்தியவரென்னும்வண்ணம் நாகரீக மென்பதோடு மதுபானத்தையும் நம்மவருட் பெரும்பாலார் நாடிவருகின்றனர். அய்யோ! அவர்கள் அதனால் விளையுங்கெடுதிகளை கனவிலும் நினைக்கிறார்களில்லையே! கள்ளுண்பதினாலுண்டாகுந் தன்மைகள் கொடியவைகளாயிருப்பதினாலல்லவா நமது முன்னோர்கள் கள்ளுண்டலைக் கொலை, களவு, காமம், குருத்துரோகம் என்பவற்றோடு சமமாகக்கொண்டு பஞ்சபாதகங்களுளொன்றாகக் கூறியிருக்கின்றார்? யாவனொருவன் மதுபானஞ் செய்கிறானோ அவன் மற்ற நான்கு பாதகங்களுஞ்செய்ய அஞ்சான் என்பதே துணிவு. ஏனெனில் மதுவை உட்கொண்டதும் அதனலகிரி மேலிட்டுப் பானஞ்செய்தவனுடைய புத்தியைக் கீழ் ஆழ்த்திவிடுகின்றது. புத்தி சுவாதீனத்தில் இல்லாதவன் என்ன கிருத்தியந்தான் செய்யமாட்டான்.

"வினை விதுவலான்மற றேழைமைப்பால தென்றோ
தாயிவன் மனைவியென்னுந் தெளிவன்றேற் றருமமென்னும்
தீவினை யைந்திலொன்று மன்றியுந் திருசகுநீங்கா
மாயையின மயங்குகின்ற மயக்கின்மேன் மயக்கும்வைத்தாம்"

என்று இராமாயணத்தில் கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பர் சொல்லியிருக்கிறார். கேவலம் மதுபானஞ் செய்வதினால் தாயென்றும் மனைவியென்றும் பகுத்தறிவில்லாமற்போகிறது! இயல்பாகவே உலகமாயையாகிய மயக்கத்தில் நாம் மயங்கிக் கிடக்கின்றோம். மதுபானஞ்செய்து அதன் மேலும் மயக்கத்தை உண்டுபண்ணுவது எவ்வளவு அறிவீனம்!

அன்றியும் தினந்தினம் எத்தனையோ குடிகாரர்கள் புத்தி சுவாதீனத்திலில்லாமல் அலைந்து தெருவில் புரளுவதை நாம் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கிறோமே? ஆதலின் மது உள்ளிருக்குங்காலத்தில் எவனுக்கும் புத்தியானது சுவாதீனத்திலில்லையென்பது திண்ணம். புத்தி தம்சுவாதீனத்

திலிருப்பவர்களுக்கே காமம், வெகுளி, மயக்கம் முதலியன பாதிப்பதானால் புத்தி சுவாதீனத்திலில்லாதவர்களைச் சகல குற்றங்களுந் துஷ்கிருத்தியங்களும் வந்தடைந்து வருத்துதும் என்பதில் சந்தேகமென்னை? புத்தியை விர்த்திபண்ணுவதற்கு முயல்வது மனுஷிய தர்மமாகும். அஃதன்றி, பணத்தையுஞ் செலவுசெய்து புத்தியைக் கெடுக்க முயல்பவர்களை என்னென்று சொல்லுகிறது! அஃது மிருகத் தன்மையிலும் மூர்க்கத்தன்மையன்றோ? ஒருவன் எவ்வளவு பணக்காரனாயிருந்தாலும் அவன் குடியொன்றைப் பழகுவானேல் அவனுடைய பொருள் அத்தனையும் போய், கையில்ஓடோ, கன்னக்கோலோ ஏந்தவேண்டிவரும். ஆ! ஆ! எத்தனைபேர் அதனால் வறியர்களாகிவிட்டார்கள். அதன் கெடுதிகள் இவ்வளவுதானென்று எண்ணுகிறீர்களோ!

"வறுமையாற் களவுசெய்வர் மையலாற் காமத்தாழ்வர்
குறுமைசேர் பகையினால்வெங் கொலைசெய்வர் வசையினோடுஞ்
சிறுமைதந் துயிரிருந்துஞ் செத்தவராக்கியிம்மை
மறுமையை யழிக்குங்கள்ளை மாந்தலெப் பயனைவேட்டம்மா"!

மது, அபின், கஞ்சா முதலிய லகிரி வஸ்துக்களைச் சாப்பிடுகிறதினால் தேகத்தினுடைய சிரமத்தை நீக்கி அதிக பலத்தை உண்டாக்கிறதுமல்லாமல் மனதின் கவலைகளை ஓட்டிவிட்டு பிரம்மானந்தத்தில் மூழ்கும்படி செய்கிறதென்று சிலர் சொல்லுவார்கள். இது முற்றிலும் வயித்திய சாஸ்திரத்துக்கு விரோதம். மதுவைக்குடித்தவுடன் சரீரத்திலுள்ளகருவிகளெல்லாம் வழக்கத்திற்கதிகமாய் வேலைசெய்வதினால் தற்சமயம் உற்சாக முதலியன உண்டாகலாம். ஆனால் லகிரி தீர்ந்தபிற்பாடு மிகுந்த க்ஷீணமுண்டாகிறதென்பது நிச்சயம். கிரமமாய் நடத்தினால் வெகு நாளைக்கு வேலைசெய்யத்தக்க கருவிகளை அடிக்கடி அதிக வேலைவாங்கினால் அவைகள்கெட்டுப்போகுமென்பதில் சந்தேகமென்ன? அதுபோல சரீரத்திலுள்ளகருவிகளை மதபானத்தினால் சாதாரண இயற்கைக்கு அதிகமாகவேலைசெய்யச்செய்து சிறிது சந்தோஷமும் பிரக்ஞைக்கேடுஞ் சம்பாதித்தால் கூடிய சீக்கிரத்தில் கருவிகள் தளர்ந்து ஆளுக்கே மோசம் வருமென்பதில் ஆக்ஷேபமென்ன? குடிப்பதினால் சரீரத்தில் எண்ணிறந்தரோகங்கள் உண்டாகின்றன. அதிகக்குடியினால் (Delirium Tremens) டெலிரியம் டிரிமென்ஸ் என்ற ஒரு வியாதி உண்டாகி மூளை கலங்கி மரணமே சம்பவிக்கிறது. ஐரோப்பா தேசத்திலுள்ள ஒரு சிறைச்சாலையில் மதுபானஞ்செய்யாத கைதிகளில் நூற்றுக்கு ஏழுபேர்தான் இறக்கிறதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. குடிக்கிற வழக்கத்தைக் கைக்கொண்டிருக்கிற கைதிகளில் சாவு அதற்கு எத்தனையோ மடங்கு அதிகமென்று தெரிய வருகிறது.

அபினுடைய குணமோ கொடிய பாஷாணத்தைக் கொப்பாயிருக்கிறது. ஒருவண்டி அபின் ஏறக்குறைய முப்பத்தெட்டு லக்ஷம் ஜனங்களைக் கொல்லப் போதுமான விஷத்தை உடைத்தாயிருக்கிறது. ஒருவன் அபினைத் தின்பானாகில் அவனுக்குச் சாப்பாடு செல்லாது; ஒரு துளி தண்ணீரும் ஏற்காது. ஒருவாரம் வரையுங்கூட நல்ல நித்திரையிராது. அபின் சாப்பிடுவதினால் நேரிடும் துன்பங்களைப்பற்றி (DeQuincey) டிகுவன்ஸி என்பவர் சவிஸ்தாரமாய் இங்கிலீஷ் பாஷையில் எழுதியிருக்கிறார். அபின் சாப்பிடுகிறவர்களுக்கு நாளாவிர்த்தியில் இரத்தாசயமும் மூளையுங் கெட்டுப்போய்விடும். தற்கொலைசெய்யும்படியும் புத்திதோன்றும். இங்கிலாந்து தேசத்தில் (Liverpool) லிவர்ப்பூல் நகரத்தில சமீபகாலத்தில் ஒரு தனவான் 15 வருஷமாய் அபின் தின்று பழகினதினால் மூளைகெட்டுத்தான் முன்னறிந்ததெல்லாம் மறந்து, ஞாபகமென்பதை முற்றுந்துறந்து, எதையும் யோசிக்குஞ் சக்தியையுமிழந்துவிட்டபடியால் இனி யிருப்பதில் பயனில்லையென்று தற்கொலைசெய்துகொண்டான். ஆயினும் அத்தனவான் செய்த நன்மை ஒன்றிருக்கிறது. இனி உலகிலுள்ளோர் அபின் தின்று கெடாவண்ணம் தான் அதனால் கெட்ட வரலாற்றை மரணசாதனமாக வெழுதி நம்மை எச்சரித்திருக்கிறார். ஒருகாலத்தில் (Burmah) பர்மா தேசத்தில் அபின் சாப்பிடுகிறவர்களைக் கொலைக்குத்தீர்ப்புச் செய்கிற வழக்கமிருந்தது. அபினாலுண்டாகுங் கெடுதலை உத்தேசித்தல்லவா இப்பேர்க்கொத்த கொடிய தண்டனை விதிக்கப்பட்டிருந்தது? இந்தத்தேசத்தில் பற்பலவிடங்களிலிருக்கிற பயித்திய ஆஸ்பத்திரிகளில், கஞ்சாக்குடித்து பயித்தியங்கொண்டவர்கள் அதிக மென்னமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. கஞ்சாச் சாப்பிடுதலும அபினுக்குச் சமானமாய் சகல கெடுதிகளையும் விளைவிக்கின்றது.

மதுபானஞ்செய்தலை சகலராலும் இகழப்படுகிறதென்பது குடிக்கிறவர்களுக்கே தெரியும். அதற்குச் சாக்ஷியம் அவர்கள மறைவில் குடிப்பதே போதுமானது. அப்படியிருந்தும் அவர்கள் அதை விடுகிறார்களில்லை. இது என்னபேதைமை! மதுபானத்தினாலுண்டாகும கெடுதிகளை இவ்வளவென்று சொல்லமுடியாது. புத்திநாசம, தனநாசம், மானநாசம், வலிநாசம ஆகிய நாசம் யாவும் அதனால் விளைகின்றன. இங்ஙனமிருப்பதால் மதுவையும் அதுபோல லகிரியைக்கொடுக்கும் வேறெந்தப் பதார்த்தத்தையும் உட்கொள்ளலாகாது. இப்படிச்சொன்னால் சிலர் "நாங்கள் அதிகம சாப்பிடுகிறதில்லை, மிதானமாகத்தானே சாப்பிடுகிறோம். அளவுக்கு மிஞ்சக்கூடாதேயொழிய எதுவு மிதமாயிருக்கலாமல்லவா?" என்று விடையளிக்கிறார்கள். அப்படிச்சொல்வது மிகவும் அறிவீனம். ஏனெனில் லகிரி வஸ்து தங்களுக்குக் கெடுதியை விளைக்கிறதென்பதைத் தெரிந்துகொண்டே மிதமாய்ச் சாப்பிடுகிறதாகச் சொல்லுகிறார்கள். கெட்டதென்று தெரிந்திருந்தும் அதைக்கொஞ்சமாய்ச் சாப்பிடுவேனென்று

சொன்னால் அது எவ்வளவு விவேக சூன்யத்தை வெளிப்படுத்துகிறது. தெரிந்து செய்வதுபெரியகுற்றமல்லவா? ஒருவனெதார்த்தத்தில் மிதமாயச் சாப்பிட்டபோதிலும் நாள் செல்லச்செல்ல அது அபரிமிதமாய்விடுமென பதில் சந்தேகமில்லை. கடலில் நீரைப்படைத்த கடவுள அதைக்கள்ளா கப்படைத்தாரில்லையே என்று நாளாவிர்த்தியில் விசனப்படும் படியும் நேரிடும். மிதமாயிருக்கவேண்டுமென்பது தீமை பயக்காத காரியங்களி லேயேதவிர கெடுதியை உண்டுபண்ணுபவைகளிலல்ல! "அளவுக்குமிஞ் சினால் அமிர்தமும் விஷமாம" என்ற பழமொழி கேட்டிருப்பதில்லையா? "அளவுக்குமிஞ்சினால் விஷம் விஷமாகும" என்று யாரேனும் சொல்ல வேண்டுமோ? அது விஷமாகத்தானேயிருக்கிறது.

"துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்"

என்று திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றனர். கள்ளைக்குடித்தவர்கள் நஞ்சைக்குடித்தவர்களுக்கு ஒப்பாவார்கள். மதுபோன்ற லஹிரி வஸ்துக்கள் உட்செல்லும்போதே ஆபத்தை விளைவிக்குமானால் அவை அளவிற்கு மிஞ்சினவிடத்து வரும் தீமையைப்பற்றிச் சொல்ல வேண்டுமோ?

சிலர் லஹிரியுள்ள பதார்த்தங்களைத் தாம் சாப்பிடுகிறதுமல்லாமல் தம்முடைய ஸ்திரீகளுக்குங் குழந்தைகளுக்குங் கொடுத்துப் பழக்கிவருகிறார்கள். இவர்கள் ஸ்வதேசநாசத்தைத் தேடுகிறார்களேயொழிய வேறில்லை. குடியர்களுடைய குழந்தைகளுக்குச் சுபாவமாகவே குடியில் பிரியமிருக்கும். பால்யத்தில் அவர்களுக்கு அப்பியாசமுஞ்செய்து வைத்தால் பின்னர்க் குடும்பக்கேடு வருமென்பதற்கு ஐயமுண்டோ? "தொட்டிற் பழக்கஞ்சுடுகாடுமட்டும்"

"கரிகாய்கழுகு பிடுங்கவழிநடுவிற் கிடந்த சவமதனை
உரியா ரிலரென் றிடுகாட்டி லுடன்கொண்டேகிக் கட்டையில்வைத்
தெரியா நின்றேன் பிணம்விழித்திஃ தென்றன்மயக்கென் றியம்பி
மெய்கொள்
எரியையவிக்கு முன்னமெழுந்த யக்கட் கடைக்குள் புகுந்ததுவே"

என்று நீதிநூலில் வேதநாயகம் பிள்ளையவர்கள் பாடி யிருக்கிறார்கள். ஒருவன் பிரயாணம்போகையில் வழிநடுவில் ஒரு பிரேதங் கிடந்ததைக் கண்டு அதை அநாதிப பிரேதமென்றெண்ணிச் சமீபத்திலிருந்த சுடுகாட்டுக் குக்கொண்டுபோய் விறகு அடுக்கி அதின்மேல்வைத்து நெருப்பு மூட்டினான். நெருப்பு தேகத்தின்மேல் தாக்கினவுடன் அந்தப்பிரேதம்போனவன் விழித்து இது என் குடிமயக்கென்று சொல்லிவிட்டுப் பரபரப்பாயோடிப் பக்கத்திலிருந்த கட்கடைக்குள் தன் வழக்கம்போலவே புகுந்தான். பழக்கம் மிகவும் கொடியது கொடியது!!

மதுபானஞ்செய்வது கெடுதலென்று இங்கிலாந்து முதலிய இடங்களில் அநேக சங்கங்கள் ஏற்பட்டுத் தற்காலத்தில் எத்தனையோ ஆயிரம் பேர்கள் அதை முழுவதும் விலக்கிச் சுகமடைந்திருக்கிறார்கள். ஆதலால் இவ்விஷயங்களை நன்குணர்ந்து இந்தக்கொடிய பழக்கத்தையுடையவர்கள் அதை இக்ஷணமுதல் மறந்து மது முதலிய வெறி வஸ்துக்களை கையினால் தொடுகிறதில்லையென்றும் கண்ணினால் பார்க்கிறதில்லையென்றும் கடவுள் முன்புக்குச் சத்தியஞ்செய்து உய்வார்களாக.

S. வேதமூர்த்தி முதலியார், B. A.

அறிவுவிளக்கம்.

பழமைக்கிரங்கி:—அன்னா! லௌகிகத் தொழிற் செய்தோய்ந்தவுடன் அறிவை வளர்க்கும் ஆன்றோர் நூல்வாசியாமல் அடிபிடிசண்டை, ஆனாயவர்த்தகன் சரித்திரம், இடம்விட்டு இடம்மாற்றிக் கொள்ளு மிடும்பர்சரிதை, ஈயார் பொருளைக் கொள்ளை கொள்ளு மீடழிவான்கதை, உழுத்தனுமினாயுண்ணு மூன்மத்தன் சரிதை, ஊரார் பொருட்குப் பேயாய்ப் பறக்கு மூடமையோன் சரிதை, எளியர்பாலுண்மை விளக்காத ஏனவாயன் கதை, ஏமாந்தவனையேய்க்கு மிடையன்கதை, ஐக்குரவரானை யகற்றுபாவன்கதை, ஒன்றுனாக்சேரு மொட்டன்கதை, ஓஞ்சொல்வதிலோய்விலானகதை, புறத்திலௌவியமோதுவோன்காதை முதலியவற்றைப் புண்ணியகதைகளாகப் பாவித்து, ஒருவர்க்கொருவர் பேப்பரில் படித்தும், வாய் ஓயாது பேசியும், வீண்காலம் போக்குவோரை யழைத்துக்கேட்டால், அவர்கள் சாஸ்திரோக்தமான சமாதானம் சொல்லுவார்களா? ஒரு நாளும் சொல்லார். மேற்கூறிய துர்க்கிரியைகளால் தர்மராஜன் நளன் முதலிய சக்கிரவர்த்திகள் துன்பமடைந்தது அவர்கள் சரிதையை வாசித்தால் விளங்கும். இதுவுமொழிய "துஷ்ட ருறவுஞ் சூதுசெய்வான் றன்வாழ்வும், வெட்டவெளி யிற்குவித்த வெண்பதரும்-முட்டக், காறழித்துக் கப்பற் கடலிற் கவிழ்ந்தாற்போல், பார்த்திருக்கப்போமே பறந்து", "தெய்வம் உளதென் பாதியசெயப்புகினத், தெய்வமே கண்ணின்று நினைவுறுக்கும்", "ஆதும் வாதம் வேதனைசெய்யும்", "திருமைபல செய்து சேழிக்கும் குறின், வறுமைதருவதொன்றில்", "அறத்தைவேர் கல்லு மருநரகிற்சேர்க்கும், திறத்தையே கொண்டருளைத்தேய்க்கும்-மறத்தையே, பூண்டுவிரோதஞ்செய்யும் பொய்க்குதை மிக்கோர்கள், நீண்டுவரோ வெனறா தெரிந்து" எனும்பழமொழிப் பாகத்தை முதியோர் கூறியிருக்கின்றனர். ஆகையால் "தெய்வத்தாலாகா தெனினு முயற்சிதன், மெய்வருந்தக் கூலிதரும்" எனும் ஆன்றோர் வாக்கியத்தைக் கடைப் பிடித்துத் திரிகரண சுத்தமாய்க் கர்மாண்டவிதி ஒழுகுவாய் என்றனன்.

பத்தரு நம்பி:— பழமைக்கிரங்கியே! கர்மகாண்டவிதி யென்பதென்ன? அஃதை எந்தசாஸ்திரங்களால் அறியலாம்? இதுவரையில் அதை அநுஷ்டித்து பேறுபெற்றவர்கள் யார்? இஃதை யறிவித்தாயேல் அவ்வாறொழுகின்றனன்.

பழமைக்கிரங்கி:— யான்சிறியோனாயிருந்த பருவத்தில் என்முன்னோர்கள் அநுட்டித்துவந்த குருட்டு நம்பிக்கையில் பற்றுள்ளவனாய் வெகுகாலம் கழித்தேன். அதினாற்றான் எனக்குப் பழமைக்கிரங்கி யென நாமகரணம சூட்டினார்கள். சின்னாள்சென்றபின் ஒரு மஹானை யடுத்து எந்த சாஸ்திரத்தால் கர்மகாண்டவிதியறியலாமென்று கேட்டேன். அவர் "கிருதேது மானவாதர்மா திரேதாயாம் கௌதமஸ்ததா, துவாபரேசங்கலிகிதௌ கலௌ பராஸரஸ்மிருதி" இதன் பொருள்:—கிரேதாயுகத்திற்கு மனுஸ்மிருதியும், திரேதாயுகத்திற்கு கவுதம ஸ்மிருதியும், துவாபரயுகத்திற்கு சங்கலிகித ஸ்மிருதியும், கலியுகத்திற்கு பராஸர் ஸ்மிருதியும் கர்மவிதிகளைத்தெரிவிக்கும் என்றார். கர்மகாண்டவிதிமுழுவதும இவ்விடமெடுத்துப் புகலப் பெருகுமாதலால், சிற்சில அம்ஸங்களை விளக்குகின்றனன். இராஜாங்கத்தில் சாமபேத தானதண்டமாகியசதுர்வித உபாயத்தால் ஜீவர்களை ஆத்மானந்த மடையச்செய்வது பெரியோர் துணிவு. இதற்குச்சாட்சியாகத் தாயுமானசுவாமிகள் "மூர்த்திதலந் தீர்த்தமுறையாற்றொடங்கினர்க்கோர் வார்த்தைசொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்றும், "விரும்புஞ்சரியை முதல் மெஞ்ஞான நான்கும், அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே" என்றும் கூறியிருக்கின்றனர். பராஸர் ஸ்மிருதிப்படி பிரம்ம-க்ஷத்திரிய-வைசிய-சூத்திரனெனும் நான்கு ஜாதியுளதெனவும், ஒவ்வொரு ஜாதியில் நான்கு உட்பிரிவுகளுளவென்றும் தெரிகிறது. அஃதெங்ஙனமெனில் பிராமணரில் பிராமணன், சுருதியறிந்து யுக்தியனுபவத்தால் பிரம்மஞானமடைந்தவன். சாக்ஷி சங்கராச்சாரியர், இராமாநுஜாச்சாரியர் முதலியோர். பிராமணரில் க்ஷத்திரியன், சாஸ்திர உணர்ச்சியிருந்தும் யுத்தப்பயிற்சியில் பிரியமுடையவனாயிருப்பவன். சாக்ஷி பரசுராமன் முதலியோர். பிராமணரில் வைசியன், சாஸ்திர உணர்ச்சியிருந்தும் வர்த்தகஞ்செய்யப் பிரியப்படுபவன். சாக்ஷி உலகில் பலரைக்காணலாம். பிராமணரில் சூத்திரன், ஞான ஹீனமுடையவனாய் உண்டல்-உறங்கல்-ஸ்ரீபோக மநுபவித்தல் ஆகியமூன்று கர்மந்தவிரவேறொரு ஆராய்ச்சியும் இலான். சாக்ஷி உலகில் அளவிலாமல்காணலாம். இவ்வாறே க்ஷத்திரியன் முதலிய மூன்று ஜாதிகளினும் உண்டு. அஃதையெடுத்துரைக்கப் பெருகுமாதலால் விடுத்தனன். பிராமண ஜாதிக்குரிய கர்மம் யாதெனில், உதயம் மத்தியானம்-அஸ்தமனமாகிய காலங்களில் ஸ்நானஜபகிருத்தியங்கள் முடித்து, சந்தியாவந்தனம் தவறாது செய்து, வேதமோதி, யாகாதிகள் நடத்தி, மற்ற மூன்று ஜாதியர்களுக்குரிய கர்மங்களின்னவென்றும், செய்யும்வித

யின்னதென்றும் அவர்களுக்குக் கற்பித்து அவர்களால் ஜீவனோபாயம் தேடிக்கொள்வது முறையாகும். க்ஷத்திரியர்களுக்குரிய தருமமாவது திரிகாலங்களிலும் சந்தியாவந்தனம் தவறாதுசெய்து பிராமணரால் வேதோபதேசம்செய்துகொண்டு சாம-பேத-தான-தண்டமாகிய சதுர்வித உபாயத்தால் அரசுசெலுத்தி வருவதே. வைசியரும் ஷை பிராமணரால் சாஸ்திரப் பயிற்சியடைந்து மேல்கண்டபடி சந்தியாவந்தனமசெய்து "முதலிலபண்டம் கொண்டுவாணிபஞ்செய் ததன்பயனுண்ணு வணிகரும்பதரோ" என்பதைக்கண்ணுற்று லாபத்திற் புசித்துச் சரியானவிலைக்கு விற்கவேண்டும். சூத்திரர் ஷை மூன்று ஜாதிகளுக்கும் ஏவலாளராயிருந்து அவர்களால்சாஸ்திரப்பயிற்சியையடைந்து நாளுக்குநாள் விருத்தியடையக்கடவர். கர்மகாண்டவிதிப்படி நடந்து பேறுபெற்றவர்களை ஒவ்வொரு மதத்திலும் காணலாம்.

பற்றறுநம்பி:—கர்மகாண்டத்தை அனுஷ்டிக்கும் ஒருவன் "படாடோபே பயங்கரா" என்பதற்கிணங்க-கட்டு-பொட்டு-ஜிட்டு-இம்மூன்றால் பகட்டி மனம்வேறு—சொல்வேறு-தொழில்வேறாக நடக்கின் கர்மகாண்டவிதிப்படி நடந்தவனாவனோ? நன்குவிளக்குக என்றான்.

பழமைக்கிரங்கி:—அண்ணா! "கேட்கக்கேட்கக் கின்னரம் இனிக்கும்" என்பதையும் "எறும்பூரக் கற்குழியும்" எனும் வாக்கியத்தையும் உணர்ந்த உன்மதிக்கு யான் கூறுவனாக. பிரம்ம-க்ஷத்திரிய-வைசிய-சூத்திரரெனும் நான்கு ஜாதிகளில் ஒவ்வொரு ஜாதிக்கும் பிரமசரியம்-கிரகஸ்தம்-வானப்பிரஸ்தம்-சந்நியாசம் எனும் நான்கு ஆசிரமங்கள் உள. பிரமசரியவிதி யாதெனில் மனம்-வாக்கு-காயமாகிய திரிகரணமொத்து சத்திய நடையுடையவனாயிருக்கிறேனெனும் சாக்ஷியைப்பிறருக்கு காண்பிக்கும் நிமித்தம் விருதுக்கொடிபோல் முப்புரிப்பூணூல் தரித்து, பிக்ஷாபட்சகராய், தர்ப்பாஸனப் பிரியராய, சாஸ்திர விசாரணையுடையவராய், கடவுள் துதியுடையவராய் ஒழுகுதல். சிலர் பூணூல் தரியாமல் ஷை ஆசிரமத்தை யனுஷ்டிப்பர். கிரஹஸ்தாசிரமமாவது தன் திரிகரணத்தோடு மனைவியின் திரிகரணத்தையும் தான் திருத்துவதாக பிறர்க்கு விளக்கும்படி ஆறுபுரிப் பூணூல் தரித்து, "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கலொன்றாங் கைம்புலத்தாறோம்பறலை" எனும் ஆன்றோர் வாக்கியத்தைக் கண்ணுற்று, தான் சேகரிக்கும் வரும்படியை-அரசர்க்கொருபங்கும்-தாய்தந்தையர்-அதிதிகள் முதலிய விருந்தினோர்-பந்துக்கள்--தெய்வம்-இந்நால்வர்க்கு நான்கு பங்கும் தனக்கு ஒரு பங்கும், ஆக ஆறு பங்காகப் பகிர்ந்துகொடுத்து, இல்லாளும் தானும் மனமொத்து "இல்லறமல்லது நல்லறமன்று" என்பதையுணர்ந்து 32 வகை இல்லறதருமத்தையும் வழுவாது நடத்துதல்,

(இன்னும் வரும்)

பு. ஜயராமபிள்ளை,

நூற்பெயர்.

முழுமுதற்கடவுள் கடைமுதற்றொடர்நிலை.

நூல்.

1. முழுமுதல் யாதெனி னெவற்றையுங் கண்டங் கவைமுழுதுஞ்
செழுமுதல் யாது செழுமியுங் கிட்டரி தாய்க்கிளைத்து
பழுமரம் தேரும் பறவையிற் சார்ந்தன்பிற் பல்லுயிருந்
தொழுமுதல் யாததன் றன்மையி தென்றொன்றுந் தோன்றிலதே.

(இன்னும் வரும்)

தி. பா. சிவராமபிள்ளை.

உரை.

நூற் பெயர்.

(பதவுரை) முழுமுதல்-அகண்டபரிபூரண அநாதி நித்தியப்பொருளான, கடவுள்-கடவுளின பேரில் இயற்றப்பட்ட, கடை-அந்தம், முதல்-ஆதி, தொடர்நிலை-மாலை. (அந்தம்-ஆதி=அந்தாதி)

செய்யுள்.

(ப-ரை) முழுமுதல்-அகண்டபரிபூரண அநாதி நித்தியப்பொருள், யாது-எது, எங்கு-எவ்விடத்திலுள்ளது, எவற்றையுங்கண்டு-அறியப்படுவனவாகியனால, சூக்ஷ்மப் பிரபஞ்சங்களனைத்தையும் அறிந்து, அவ்வவை முழுவதும்-அவ்வவ்விடத்தில் அவ்வப்பொருள்களின் ஒவ்வோரணுவினும், செழுமுதல்-வியாபித்து நிற்கும் பரம்பொருள், யாது-எது, செழுமியும்-அங்ஙனம் எவ்விடத்தும் எப்பொருளினும் பொருந்தி நின்றும், கிட்டரிதாய்-மனம், வாக்கு, காயம் எனனும் திரிகரணங்களாலும் எட்டுதற்கருமையாயும், பல்லுயிரும்-எண்ணிறந்த ஜீவர்களெல்லாம், இளைத்து-வருந்தி, பழுமரம்-கனிவழியாக, தேரும்-மேலேற முயலும், பறவையில்-பறவைக்குஞ்சுகளைப்போல, சார்ந்து-சரியை, கிரியை, யோகம், ஞானம், என்னும் நான்கு பாதங்களைப்பற்றி, அன்பில்-மெய்யன்பினால, தொழுமுதல்-வணங்குகின்ற உண்மைப் பொருளாயும் உள்ளது, யாது-எது, அதன்தன்மை-அப்பரம் பொருளின் இயல்பு, ஈதென்று-இன்னதென்று சுட்டிக்காட்ட, ஒன்றுந் தோன்றிலது-எளியேனுடைய சிற்றறிவிற்கு யாதொன்றும் புலப்படவில்லை.

மு. பொ. ஈசுரமூர்த்தியாபிள்ளை.